திருச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நம்பர் 1 டோல்கேட்டில் அமைக்கப்பட்டுள்ள புகழினி மருத்துவமனை அறிமுக விழாவில் பங்கேற்று மருத்துவமனையை திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, எம்.எல்.ஏ.க்கள் தியாகராஜன், கதிரவன் கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பெரு நற்கிள்ளி, லீலாதேவி டாக்டர் ரவிக்குமார் டாக்டர் கோப்பெருந்தேவி விஜயகுமார், சமயபுரம் அறங்காவல் குழு தலைவர் இளங்கோவன் ராஜசேகர், ஒன்றிய செயலாளர் செந்தில்குமார், சார்லஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முதல்வர் - தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவு ஊர்வலம்

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத்தினர் அலைகடலென திரண்டு வாரீர்!

மாவட்டம் முழுவதும் கலைஞர் திருவுருவப் படங்களுக்கு மலர் அஞ்சலி!

மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

சென்னை,ஆக.5-

முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதும் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தி சென்னையில், மாண்புமிகு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள அமைதிப் பேரணியில் ஆயிரக்கணக்கில் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்கும் வேண்டும் என மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் அறிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கு மாவட்டக் கழகச் செயலாளர்அமைச்சர் தா.மோ.அன்பரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்கு பின்னால் - ஜன நாயக பேரியக்கமான தி.மு.க.வை 50 ஆண்டு காலம் தனது அயராது உழைப்பால் கட்டிக் காத்து - கழகத்தை எஃகு கோட்டையாக்கி, கழகத் தொண்டர்களை கண்

ணிமை போல் காத்த ஒய்வறியா உழைப்பாளி - தாம் போட்டியிட்ட 13 சட்டமன்றத் தொகுதிகளிலும் சட்டமன்ற உறுப்பினராக மகத்தான வெற்றியைப் பெற்ற சாதனை நாயகர்,

5 முறை தமிழக முதலமைச்சராக சிறப்பான முறையில் - பார் போற்றும் வகையில் பணியாற்றி தமிழக மக்களுக்காக அரும்பாடுபட்டு - எண்ணிலடங்கா முற்போக்கு சட்டங்களையும் - முன்னோடி திட்டங்களை நிறைவேற்றி தந்து,

தமிழக அரசின் நிர்வாக வரலாற்றில் பொற்கால ஆட்சியை தந்து விண்முட்டும் சாதனைகளால் தமிழ் நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் சென்று, கோடிக்கணக்கான ஏழை, எளிய மக்களின் வாழ்வில் ஒளி விளக்கேற்றி சரித்திரம் படைத்த முதல்வர்,

தமிழே உயிராக, தமிழினமே உணர்வாக, தமிழர் நலனும், தமிழ்நாட்டின் வளர்ச்சியுமே, வாழ்நாள் செயல் திட்டமாக கொண்ட ஒய்வறியா சூரியன், திருக்குவளையில் பிறந்து - திருவாரூரில் வளர்ந்து - உலகெங்கும் வாழும் தமிழர் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்து இருக்கும் நம் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர்,

இன்றைக்கும் மறைந்தும் மறையால், தமிழக மக்களின் இதயங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் - நம்முடைய உலகத் தமிழினத்தின் ஒப்பாரும் - மிக்காரும் இல்லா தனிப் பெரும் தலைவர், பல இந்தியப் பிரதமர்கள் - குடியரசுத் தலைவர்களை உருவாக்கி, இந்திய அரசியல் வரலாற்றில் நீங்கா இடம் பெற்ற அரசியல் பிதாமகர்,

இந்திய ஜனநாயகத்தின் காவலராக திகழ்ந்த, இந்தியாவின் மூத்த அரசியல் தலைவர், இலக்கியம்கவிதைஇதழியல்நாடகம்திரைப்படம்மேடைப்பேச்சு - அரசு நிர்வாகம் - கட்சி நிர்வாகம் என தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரையை பதித்த - பன்முக திறன் கொண்ட படைப்பாளர், நூற்றாண்டு விழா நாயகர் நம் நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர்,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6வது நினைவு நாளினையொட்டி முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆகஸ்ட் 7ஆம் தேதி புதன்கிழமை அன்று காலை 7.00 மணிக்கு சென்னை, அண்ணாசாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடம் வரை அமைதிப் பேரணி நடைபெற உள்ளது.

இதில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் பெருந்திரளாகக் கலந்து கொண்டு அமைதிப் பேரணியில் பங்கேற்க வேண்டும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ஆகஸ்ட் 7ஆம் தேதி அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு மேலும் புகழ்சேர்க்கும் வகையில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் ஒன்றியங்களில் உள்ள அனைத்து கிளைகளிலும், மாநகர பகுதி நகர பேரூர்களில் உள்ள அனைத்து கிளைகளிலும் நம் நெஞ்சம் நிறைந்த தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்தை மலர்களால் அலங்கரித்து வைத்து கழகத்தினர் அனைவரும் அன்னாரது படத்திற்கு மலர்தூவி மலர் அஞ்சலி செலுத்திட வேண்டும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறைத்அமைச்சர் மா.சுப்பிரமணியன், கலைஞர் மாரத்தான் மூலம் திரட்டப்பட்ட நிதி, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகிய நிதியின்கீழ் ரூ.5.89 கோடி மதிப்பில் எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் அரசு தாய் சேய் நல மருத்துவமனை ஆகிய இரண்டு மருத்துவமனைக்கு சேர்த்து கட்டப்பட்டு வரும் குழந்தைகளின் பெற்றோர் மற்றும் உடனிருப்போர் தங்கும் விடுதி மற்றும் உணவு தயாரிக்கும் கட்டடத்திற்கான கட்டுமானப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை ஆணையாளர் (பணிகள்) சிவகிருஷ்ணமூர்த்தி, தலைமைப் பொறியாளர் (பொது) எஸ். ராஜேந்திரன், ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் டாக்டர் தேரணி ராஜன், எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை இயக்குநர் டாக்டர் ரமா சந்திர மோகன், எழும்பூர் தாய் சேய் நல மருத்துவமனை இயக்குநர் டாக்டர் குப்புலட்சுமி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கலைஞர் நினைவு மாரத்தான் - 2022 நடத்தி திரட்டப்பட்டத் தொகையுடன் அரசுப் பங்கும் சேர்த்து

ரூ.5.89 கோடி மதிப்பீட்டில் - குழந்தைகளின் பெற்றோர் - உடனிருப்போர் தங்கும் விடுதி!

எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை வளாகத்தில் கட்டுமானப் பணியினை - அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு செய்தார்!

சென்னை,ஆக.5-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (04.08.2024) கலைஞர் மாரத்தான் மூலம் திரட்டப்பட்ட நிதி, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகிய நிதியின்கீழ் ரூ.5.89 கோடி மதிப்பீட்டில் எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் அரசு தாய்சேய் நல மருத்துவமனை ஆகிய இரண்டு மருத்துவமனைக்கு சேர்த்து கட்டப்பட்டு வரும் குழந்தைகளின் பெற்றோர் மற்றும் உடனிருப்போர் தங்கும் விடுதி மற்றும் உணவு தயாரிக்கும் கட்டிடத்திற்கான கட்டுமானப்பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

2022ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவுநாளை முன்னிட்டு கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான் போட்டி நடத்தப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் பங்கேற்ற இந்த மாரத்தான் போட்டியில் பதிவு கட்டணமாக பெறப்பட்டத் தொகை ரூ.1.22 கோடி ஆகும். இந்த தொகை National Urban Livelihoods Mission (NULM) என்கின்ற அமைப்பின் மூலம் ரூ.2.28 கோடியும், நமக்கு நாமே திட்டத்தின் மூலம் மீதித் தொகை வழங்கி ரூ.5.89 கோடி மதிப்பீட்டில் எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் அரசு தாய் சேய் நல மருத்துவமனை என இரண்டு மருத்துவமனைகளுக்கும் சேர்த்து இம்மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்ற குழந்தைகளின் பெற்றோர் தங்குவதற்கும், உணவு அருந்துவதற்கும் ஏதுவாக தங்கும் இடம் அமைக்கும் பணி தொடங்கி வைக்கப்பட்டது. 14,262 சதுர அடி பரப்பில் ரூ.5.89 கோடி மதிப்பீட்டில் கட்டப்படுகின்ற இப்பணி இன்று ஆய்வு செய்யப்பட்டது. இந்தக் கட்டிடத்தினைப் பொறுத்தவரை 4 தளங்களுடன் அமையவிருக்கிறது. 4 தளங்களுக்கும் 25 படுக்கைகள் கொண்ட தளங்களாக அமையவிருக்கிறது. இக்கட்டிடத்தில் சமையலறை, கழிப்பறை, குளியலறை போன்ற பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது. தரைத்தளத்தைப் பொறுத்தவரை 100 பேர் ஒரே நேரத்தில் அமர்ந்து சாப்பிட உணவருந்தும் கூடமும் கட்டப்பட்டு வருகிறது. ஆகவே இந்தக் கட்டிடம் இம்மருத்துவமனைக்கு பெரிய அளவில் பயன்படும்.

புற்றுநோய் சிகிச்சை சிறப்பு கட்டிடம் அடிக்கல் நாட்டு விழா

07.08.2024 அன்று சென்னை அரசு கஸ்தூரிபாய் பெண்கள் மற்றும் மகப்பேறு மருத்துவமனையில் ரூ.6.17 கோடி மதிப்பீட்டில் ஒரு கட்டிடம் கட்டப்பட்டு அந்தப்பணிகள் முடிவுற்றிருக்கிறது. வரும் 07.08.2024 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவுநாளில் காலை 11.00 மணிக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கட்டிடத்தினை திறந்து வைக்கிறார்கள். அதேபோல் CSR நிதியின்கீழ் Infosys நிறுவனம் ரூ.30 கோடி மதிப்பீட்டில் பல்வேறு மருத்துவ உபகரணங்களை வழங்கியிருக்கிறார்கள். இந்த ரூ.30 கோடி மதிப்பீட்டிலான மருத்துவ உபகரணங்கள் சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு ரூ.10 கோடியும், ரூ.20 கோடி அரசு கஸ்தூரிபாய் பெண்கள் மற்றும் மகப்பேறு மருத்துவமனைக்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவ உபகரணங்களையும் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் மருத்துவ பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்கள். அதேபோல் கடந்த ஆண்டு கலைஞர் பெயரால் நடத்தப்பட்ட மாரத்தான் கின்னஸ் சாதனை படைத்திருந்தது. 73000த்திற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்ற முதல் மாரத்தான் உலக சாதனை படைக்கப்பட்டு கின்னஸ் சாதனை படைக்கப்பட்டது. அந்த மாரத்தான் மூலம் கிடைக்கப்பெற்ற பதிவுத்தொகை ரூ.3.42 கோடி அதையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடத்தில் தந்து சென்னை இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் புற்றுநோய் அறுவை சிகிச்சைக்கான சிறப்பு பிரிவு கட்டிடம் கட்டப்பட வேண்டும் என்கின்ற வகையில் முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது. ஆகையால் தமிழ்நாடு முதலமைச்சர் மாரத்தான் மூலம் கிடைக்கப்பெற்ற தொகை ரூ.3.42 கோடியுடன் சேர்த்து மொத்தம் ரூ.6.85 கோடி மதிப்பீட்டில் அரசு நிதிஒதுக்கீடாக தந்து ரூ.10.27 கோடி மதிப்பீட்டில் புற்றுநோய் அறுவை சிகிச்சைக்கான கட்டிடம் இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் கட்டப்படவிருக்கிறது. அதற்கான தொடக்கப்பணிகளை இளைஞர்நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் தொடங்கி வைக்க உள்ளார்கள். அதேபோல் இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் இளைஞநர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் Critical Care Unit ஒன்று கட்டித்தர வேண்டும் என்று சட்டமன்றத்தில் பேசினார்கள். அந்தவகையில் ரூ.35 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டும் பணிகள் தொடங்கப்படவிருக்கிறது.

மருத்துவ முகாம்கள் தொடர்பான கேள்விக்கு

மேட்டூர் அணையிலிருந்து வருகின்ற உபரி நீர் இலட்சக்கணக்கான கன அடி அளவில் திறந்து வைக்கப்பட்டு இருப்பதால் சேலம், தர்மபுரி, ஈரோடு, தஞ்சாவூர் போன்ற பல்வேறு மாவட்டங்களில் காவேரி ஆற்றங்கரையோரம் இருக்கின்ற மக்கள் வெள்ளப்பாதிப்புகளிலிருந்து பாதுகாத்திடும் நோக்கில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறை துரிதநிலையில் செயல்பட்டு முகாம்களை அமைத்து 1000த்திற்கும் மேற்பட்ட பொதுமக்களை முகாம்களில் தங்கவைத்து உணவுகளை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தநிலையில் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நேற்றைக்கு முன்தினம் 37 இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு மக்களுக்கு தேவையான மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. நேற்று (02.08.2024) இம்மருத்துவ முகாம்கள் 50க்கும் மேற்பட்ட இடங்களில் நடத்தப்பட்டது. குறிப்பிட்ட 4 மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட சுகாதார அலுவலர்களிடம் இன்னமும் கூடுதலாக எத்தனை முகாம்கள் தேவையோ அதனை அதிகப்படுத்திக் கொள்ளலாம் என அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அந்தவகையில் இன்றும் காவேரி ஆற்றங்கரையோரம் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருக்கும் பொது மக்களுக்கு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு அவர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டிருக்கிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன், துணை ஆணையாளர் (பணிகள்) சிவகிருஷ்ணமூர்த்தி, தலைமைப் பொறியாளர் (பொது) இராஜேந்திரன், சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.தேரணி ராஜன், எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை இயக்குநர் மரு.ரமா சந்திரமோகன், அரசு தாய் சேய் நல மருத்துவமனை இயக்குநர் மரு. குப்புலட்சுமி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

பல்வேறு புதுமைகள் புகுத்தி, அரசுப் பள்ளி மாணவர்களின் உயர்கல்வியை -

முதன்மை கல்வி நிறுவனங்களுக்கு நிகராக உயர்த்தி சாதனை படைத்த தமிழ்நாடு அரசு!

'தினகரன்' தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை,ஆக.5-

பள்ளி மாணவர்களுக்கு தேவையான நவீனத்தையும் புதுமைகளையும் புகுத்தி, அரசுப் பள்ளி மாணவர்களின் உயர்கல்வியை முதன்மை கல்வி நிறுவனங்களுக்கு நிகராக உயர்த்தி சாதனை படைத்துள்ளது தமிழ்நாடு அரசு என்று தினகரன் நாளேடு 4.8.2024 தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:

நாட்டின் எதிர்காலம் மாணவர்கள் கையில். அந்த மாணவர்களை கையாளும் முறையிலும், அவர்களின் தேவையை பூர்த்தி செய்யும் இடத்திலும் அரசின் செயல்பாடு மேலோங்கி நிற்க வேண்டும். நாட்டிற்கே முன்னோடியாக மாணவச் செல்வங்களுக்கு தேவையான அனைத்தையும் செய்து கொடுக்கிறது திராவிட மாடல் அரசான தமிழ்நாடு அரசு.

பள்ளிக்கல்வியில் செய்கின்ற புரட்சி, உயர்கல்வியில்

தினகரன்

உலகின் அறிவுச்சொத்து

நாடு எதிர்காலம் மாணவர்கள் கையில். அந்த மாணவர்களை கையாளும் முறையிலும், அவர்களின் தேவையை பூர்த்தி செய்யும் இடத்திலும் அரசின் செயல்பாடு மேலோங்கி நிற்க வேண்டும். நாட்டிற்கே முன்னோடியாக மாணவச் செல்வங்களுக்கு தேவையான அனைத்தையும் செய்து கொடுக்கிறது திராவிட மாடல் அரசான தமிழ்நாடு அரசு. பள்ளிக்கல்வியில் செய்கின்ற புரட்சி, உயர்கல்வியில் சாதனை படைக்கச் செய்கிறது. பள்ளி மாணவர்களுக்கு தேவையான நவீனத்தையும், அவர்களின் ஆற்றலை பெருக்கக்கூடிய நான் முதல்வன் உள்ளிட்ட திட்டங்களையும் தந்து தமிழக மாணவர்களை மிளிரச் செய்து கொண்டிருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் தமிழ்நாடு இந்தியாவிலேயே நம்பர் ஒன் இடத்தை பெற்றிருக்கிறது என்றால், அதன் உழைப்பு கடந்த 3 ஆண்டுகளாக பள்ளிக்கல்வித்துறையில் நிகழ்ந்தவையாகும். தனியாருக்கு போட்டியாக திகழும் வகையில் அரசு மாடல் பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்ட அதிநவீன ஆய்வகங்கள், மேம்படுத்தப்பட்ட பாடத்திட்டங்கள், அனிமேஷனில் எளிமையாக புரியும் வகையில் கற்றுக்கொடுப்பது, மாடல் கேள்வித்தாள்கள் மூலம் மாணவர்களின் திறனை வளர்ப்பது, மணற்கேணி செயலி என பல்வேறு புதுமைகளை புகுத்தி அரசு பள்ளி மாணவர்களின் உயர்கல்வியை முதன்மை கல்வி நிறுவனங்களுக்கு உயர்த்தி சாதனை படைத்திருக்கிறது தமிழ்நாடு அரசு.

அரசு பள்ளி மாணவிகளை அதிகளவு உயர்கல்வியில் சேர்க்க புதுமைப்பெண் திட்டம் எப்படி உதவிக்கொண்டிருக்கிறதோ, அதுபோலவே தமிழ்புதல்வன் திட்டம் திகழப்போகிறது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. காரணம், புதுமைப்பெண் திட்டம் மூலம் கல்லூரிக்கல்வியில் சேரும் மாணவிகளின் எண்ணிக்கை 34 சதவீதம் உயர்ந்திருக்கிறது. அறிவின் ஆற்றலை பெருக்கிட உயர்கல்வி மிகவும் அவசியம், அதுவும் முதன்மை கல்வி நிறுவனங்களில் படித்து நாட்டிற்கு பெருமை சேர்த்திட வேண்டும் என, தான் செல்லும் இடமெல்லாம் மாணவ கண்மணிகளிடம் எடுத்துரைக்கிறார் தமிழ்நாடு முதல்வர்.

ஐஐடி, என்ஐடி போன்ற முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் சேரும் தமிழக அரசு பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை திராவிட மாடல் அரசு வந்தபின், பன்மடங்கு உயர்ந்திருக்கிறது. கடந்த 2022-ம் ஆண்டில் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் 75 அரசு பள்ளி மாணவர்களே சேர்ந்திருந்தனர். அது 2023ல் 274 ஆகவும், நடப்பாண்டு அது இருமடங்காக 447 என அதிகரித்திருக்கிறது. இந்த மாணவர்கள் மத்தியில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின்,"உங்கள் பின்னால் இந்த அரசு இருக்கிறது, நீங்கள் தனி ஆள் கிடையாது, உங்கள் முன் தோன்றும் தடைகளையெல்லாம் தகர்த்தெறிந்து செல்லுங்கள்" என நம்பிக்கையூட்டியிருக்கிறார்.

இந்தியாவில் உள்ள ஐஐடி, என்ஐடி மட்டுமின்றி தேசிய சட்டப்பல்கலைக்கழகங்கள், விண்வெளி ஆராய்ச்சித்துறை என அனைத்து துறைகளிலும் முதன்மையாக விளங்கும் கல்வி நிறுவனங்களில் சேரும் அரசு பள்ளி மாணவர்களின் கல்விச்செலவை அரசே முழுமையாக ஏற்கும் என்றும், மலேசியா, தைவான், ஜப்பான் போன்ற வெளிநாடுகளில் உலகின் சிறந்த பல்கலைக்கழகங்களில் சேர செல்லும் மாணவர்களின் முதல் பயணச்செலவை அரசு ஏற்கும் என்றும் அறிவித்திருக்கிறார் முதல்வர்.

உயர்கல்வி, ஆராய்ச்சி படிப்பிற்கு எந்த அரசு அதிமுக்கியத்துவம் அளிக்கிறதோ, அந்த அரசின் செயல்பாடு காலத்திற்கும் நிலைத்து நிற்கும். அத்தகைய செயல்களை செய்யும் தமிழ்நாடு அரசு வானுயரத்திற்கு உயரும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. நம் மாணவர்கள், எதிர்காலத்தில் தமிழ்நாடு, இந்தியாவுக்கு பெருமை சேர்ப்பதோடு நிற்காமல் உலகின் அறிவுச்சொத்துக்களாக விளங்குவார்கள் என்பதிலும் எந்த சந்தேகமும் இல்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

89வது வட்டத்தில்

'வருமுன் காப்போம்' திட்ட ஏற்பாடுகள்!

எம்.இ.சேகர் ஆய்வு!

சென்னை, ஆக.5

சென்னை மாநகர் முழுவதும் வருமுன் காப்போம் நோய் தடுப்பு நடவடிக்கைகளை சென்னை மாநகராட்சி மேற்கொண்டு, ஆங்காங்கு கொசு மருந்து அடிப்பது உள்ளிட்ட சுகாதாரப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

89வது வார்டுக்கு உட்பட்ட கலெக்டர் நகரில் உள்ள அனைத்து தெருக்களிலும் வருமுன் காப்போம் நோய் தடுப்பு நடவடிக்கையாக சுகாதார பணி கொசு மருந்து அடிக்கும் பணியை வட்டக் கழகச் செயலாளரும் மாமன்ற உறுப்பினருமாகிய எம்.இ.சேகர் நேரில் ஆய்வு செய்தார். உடன் வட்டக் கழக நிர்வாகிகள், ஏ.எல்.ஓ. மலேரியா பணியாளர்கள் கலந்துக் கொண்டனர்.

இராயபுரம் தொ குதி 50 வது வட்டம், எஸ்.என் சாலையில் இருந்த பழைய பழுதடைந்த மாநகராட்சி மருத்துவமனை இடிக்கப்பட்டு. ரூபாய்.1 கோடி மதிப்பீட்டில் புதிய மருத்துவமனை கட்டடம் கட்டுவதற்கான பணியை இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி தொடங்கி வந்தார். இந்நிகழ்வில் இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், மாமன்ற உறுப்பினர் சுரேஷ், மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் உடனிருந்தனர்.

சென்னை தெற்கு மாவட்டம், விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, 137 வது வார்டு ராஜீவ் காந்தி நகர் பகுதியில், புதிய சாலை அமைக்கும் பணியினை விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா ஆய்வு மேற்கொண்டார். உடன் வட்டக் கழகச் செயலாளர் பி.கே.குமார், பகுதி துணை அமைப்பாளர் அசோக்குமார், மதி, மோகன், சு.ரா.விக்கி, பரணி உள்ளிட்ட கழகத்தினர் உள்ளனர்.